செ.வெ.எண்: 904/2017 நாள்: 04.12.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தோவாளை வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகளை கன்னியாகுமரி மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு. திரு.டி.இராஜேந்திர குமார் இ.ஆ.ப.,அவர்கள் இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

---

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்திற்குட்பட்ட கேசவன்புதூர், அழகிய பாண்டியபுரம், உச்சுகுளம், தோமையார்புரம், தடிக்காரன்கோணம், பூதப்பாண்டி மற்றும் தாழக்குடி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகளை கன்னியாகுமரி மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.இராஜேந்திர குமார் இ.ஆ.ப.,அவர்கள் இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கேசவன்புதூர் மற்றும் உச்சுகுளம் உள்ளிட்ட பகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்டு மின்கம்பங்கள், மின்கம்பிகளின் மீது சாய்ந்துள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் பணிகளையும், தடிக்காரன்கோணம் பகுதியில் புதிய மின்கம்பங்கள் அமைக்கும் பணிகளையும் பார்வையிட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.டி.இராஜேந்திர குமார் இ.ஆ.ப., அவர்கள் போர்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு மரங்களை அப்புறப்படுத்தி விரைவில் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று மின்வாரியத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், தடிக்காரன்கோணம் பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைக்கப்பட்டுள்ள முகாமில் தங்கியுள்ள பொதுமக்களை சந்தித்து அவர்களிடம் குறைகளை கேட்டறிந்த கண்காணிப்பு அலுவலர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அனைவருக்கும் விரைவில் நிவாரண உதவிகள் வழங்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

பூதப்பாண்டி பேரூராட்சியில் மின்மாற்றி சரிசெய்யப்பட்டு வரும் பணிகளையும், தாழக்குடி பகுதியில் மின்கம்பங்கள் சரிசெய்யப்பட்டு வரும் பணிகளையும் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.இராஜேந்திர குமார் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.

தோவளை வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 364 உயர் மின்னழுத்த மின்கம்பங்கள் புயலால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 194 மின் கம்பங்கள் புதிதாக அமைக்கப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. அதே போன்று 624 குறைந்த மின்னழுத்த மின்கம்பங்கள் புயலால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 400 மின் கம்பங்கள் புதிதாக அமைக்கப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. தோவாளை வட்டத்திற்குட்பட்ட பல பகுதிகளில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள பகுதிகளிலும் புயலால் பாதிக்கப்பட்ட மின் கம்பங்கள் போர்கால அடிப்படையில் விரைவில் சரிசெய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

மேலும் குமாரபுரம், ஆரல்வாய்மொழி வடக்கு மற்றும் தெற்கு செண்பகராமன்புதூர், மாதவலாயம், வீரமார்தாண்டம்புதூர், சண்முகபுரம் உள்ளிட்ட 7 கிராமத்திற்குட்பட்ட பகுதிகளில் மின்கம்பங்கள் சரிசெய்யப்பட்டு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தோவாளை, திருப்பதிசாரம், தடிக்காரன்கோணம், பூதப்பாண்டி ஆகிய பகுதிகளில் 50 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆரல்வாய்மொழி மற்றும் பூதப்பாண்டி பேரூராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளிலும், தோவாளை, சகாயநகர், மாதவலாயம், செண்பகராமன்புதூர், பீமநகரி உள்ளிட்ட பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அழகிய பாண்டியபுரம் மற்றும் தாழக்குடி பேரூராட்சி பகுதிகளில் லாரிகளின் மூலம் குடிநீர் அனைத்து பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வின்போது, சிறப்பு வருவாய் அலுவலர் (நிலமெடுப்பு) திரு.ரமேஷ், மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் திரு.சண்முகம், உதவி ஆணையர் (கலால்) திரு.காளிமுத்து, தோவாளை வட்டாட்சியர் திரு. சுரேஷ்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம்

---